கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

எதிரி தரப்பு 1 வது சாட்சி (எ.த.சா.1)

STC No.38/2023

| | | |
|---|---|---|
| பெயர் | - | ஜெபரோஸ் பிளஸ்லின் |
| க/பெ | - | ரூபன் |
| கிராமம் | - | யாக்கோபுரம் |
| தாலுகா | - | இராதாபுரம் |
| தொழில் | - | இல்லத்தரசி |
| வயது | - | 34 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 நாள் வியாழக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். நான் யாக்கோபுரத்தில் குடியிருந்து வந்தேன். தற்போது காவல்கிணறு ஊரில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் அசோக் என்பவரை இதற்கு முன்பு எனக்கு தெரியாது. நான் புகார்தாரிடம் எந்தவிதமான பணமும் வாங்கவில்லை. 30.10.2021 ம் தேதி எனது கணவரும் எனது அண்ணனும் சேர்ந்து குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டி அஞ்சுகிராமம் ஊருக்கு சென்றனர். எனது கணவரும் எனது அண்ணனும் சென்ற இடத்தில் அசோக் என்பவரும் அவரது பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்யும் நான்கு பேர்களும் சேர்ந்து எனது கணவரையும் எனது அண்ணனையும் பிடித்து வைத்தனர். அன்றைய தினம் மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது கணவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனே அஞ்சுகிராமம் வருமாறு கூறினார். அசோக் என்பவருடைய பைனான்ஸ் நிறுவனம் லெவஞ்சிபுரம் ஊரில் உள்ளது. நான் லெவஞ்சிபுரம் பஸ் ஸ்டான்டில் இறங்கும்போது சுமார் 4.00 மணி இருக்கும். நான் இறங்கும் சமயம் எனது அண்ணன், அசோக் என்பவர் மற்றும் 4 பேரும் ஒரு கடையில் நின்று கொண்டு இருந்ததை நான் பார்த்தேன். நான் எனது அண்ணனிடம் சென்றேன் அப்போது அசோக் என்பவர் என்னிடம் கையொப்பம் மட்டும் இட்டு இரண்டு காசோலைகளை கேட்டார். எனது எனது பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ், எனது மாமனார், மாமியாரின் குடும்ப அட்டை மற்றும் காசோலை புத்தகம் காரில் இருந்தது. மேற்படி காரில்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.12.18 14:20:19 +0530

இருந்த காசோலை புத்தகத்தில் இருந்து இரண்டு காசோலைகளை அசோக் என்பவர் என்னிடம் கையொப்பம் இட்டு கேட்டார். எதற்காக கையொப்பம் இட வேண்டும் என கேட்டேன், அதற்கு காரணத்தையெல்லாம் சொல்ல முடியாது என மறுத்து விட்டார். எனது கணவரை பார்க்கவேண்டும் என கூறினேன், ஆனால் எனது கணவரை அவர்கள் காட்டவில்லை. எனது அண்ணனும் காசோலையில் கையொப்பம் செய்து விட்டு செல்லுமாறு கூறினார். அதனால் வேறு வழி இன்றி நான் காசோலைகளில் கையொப்பம் செய்தேன். பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது கணவரும், எனது அண்ணனும் வீட்டிற்கு வர இரவு சுமார் 10.00 மணியளவில் ஆனது.

2) புகார்தாரர் அசோக் சாட்சியம் அளிக்கும்போது அவர் என்னுடைய பள்ளி Class-mate என கூறினார். அது பொய் ஆகும். Class-mate என்று தான் நான் ரூ.6 இலட்சம் கொடுத்தேன் என்பதும் பொய்யாகும். மேற்படி சம்பவம் நடந்தபின்னர் எனது கணவர் வெளியில் செல்லவில்லை. பின்னர் 03.12.2021ல் எனது கணவர் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவத்தை பற்றி கடத்தல் வழக்காக புகார் அளித்தார். **மேற்படி 03.12.2021 தேதியிட்ட புகார் மனு கைநகல் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாருக்கான புகார் மனு இரசீது எண்.692/2021 எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆனால் காவல் நிலையத்தில் கடத்தல் வழக்கு போன்று விசாரிக்கவில்லை. கடத்தல் வழக்கை பண மோசடி வழக்கு போன்று மாற்றிவிட்டனர். மேற்படி புகார் மனு தொடர்பான விவரங்கள் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டது. **மேற்படி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் என்னுடைய கணவருக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காவல் நிலையத்தில் இருந்து 06.12.2021 அன்று விசாரணைக்கு அழைத்தார்கள். மேற்படி விசாரணையின் போது அன்றைய தினத்தில் உதவி காவல் ஆய்வாளராக இருந்த பார்த்திபன் என்பவர் எனது குழந்தைகளின் பிறப்பு சான்றிதழையும், எங்கள் குடும்ப அட்டையும் பெற்று தந்தார். எங்களுடைய வாகனத்தையும், எனது காசோலைகளையும் திரும்ப பெற்று தரவில்லை. எங்கள் வாகனத்தின் பதிவு எண்.TN72AB3273 ஆகும். **மேற்படி வாகனத்தின் கிரைய ஒப்பந்தம் எ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காவல் நிலையத்தில் இருந்து அடிக்கடி கைப்பேசியில் அழைத்து எப்போது அசோக் என்பவருக்கு பணம் கொடுப்போம் என கேட்டு வந்தனர். நாங்களும் எங்கள் வீட்டை விற்று பணம் கொடுக்கலாம் என முடிவு செய்தோம். அதன்படி



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.12.18 14:20:24 +0530

ஐயப்பன் என்பவருக்கு எங்கள் வீட்டை விற்று விட்டோம். மேற்படி ஐயப்பன் எங்களுக்கு தரவேண்டிய தொகையை தராமல் காசோலையாக தந்து எங்களை மோசடி செய்துவிட்டார். பின்னர் நாங்கள் யாக்கோபுரம் ஊரை விட்டு காவல்கிணறு வந்துவிட்டோம். அசோக் என்னுடைய பள்ளி Class-mate என கூறுவது பொய் ஆகும். **என்னுடைய கல்லூரி படிப்பு மாற்று சான்றிதழ், சுய சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நாங்கள் இதுவரை வாங்காத பணத்திற்கு அசோக் என்பவர் எங்களை துன்புறுத்தி வருகிறார். 03.12.2021 அன்று நாங்கள் அசோக் மீது புகார் கொடுத்த நிலையில் 24.12.2021 அன்று நாங்கள் அசோக்கிடம் பணம் வாங்கியது போன்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் யாரிடமும் பணம் வாங்கவில்லை. இது பொய் வழக்காகும்.

எ.த.சா.1 முதல்விசாரணை முடிக்கப்படுகிறது.

(மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.12.18 14:20:28 +0530